1152

கும்பகோணம் விவசாய சங்கத்தின் மாஸாந்திரப் பத்திரிகை.

வாலியம் 13] 1919-ஷு ஜனவரி & பிப்ரவரி [நெ. 1 & 2.

MONTHLY JOURNAL OF 8 PAGES

EDITED BY

Mr. R. Srinivasa Iyengar B. A., and Mr. A. Subramania Iyer, B.A.

Annual Subscription is One Rupee. Post Free.

சங்கத்தின் மெம்பர்களுக்கு அறிவிப்பு.

மாதாமாதம் இப்பத்திரிகை சரியாய் உரியகாலத்தில் வெளிவாராமல் பல அசவுகரியங்கள் நேரிடுகின்றன. மற்றும் நம் ஜில்லாவிற்கு உபயோகப்படும்படியான வியாஸங்களையே நாம் முக்கியமாககவனிக்க வேண்டியிருப்பதால் சில சமயங்களில் வியாசங்களில்லாமல் பிரசுரிப்பதில் விசேஷகாலதாமதமும் ஏற்பட்டுவிடுகிறது. நிற்க, காகிதப்பஞ்சமும், அதன் விலை கடுமையையும் சங்கத்தின் மெம்பர்கள் உணர்ந்திருப்பார்களென்றே நம்புகிறோம். எக்காரியத்தையும் பொருளின்றி நடத்துவது சிரமசாத்தியம் என்பதை நாம்சொல்லவேண்டியதில்லை. ஆகவே, நம் சங்கத்திற்கு கும்பகோணம், பாபநாசம் தாலூகாவிலுள்ள கிராமாந்திரங்களில் ஏராளமான சந்தா பாக்கியிருக்கின்றன. அவைகளை மெம்பர்கள், இதுவரையில் சங்கத்தினிடம் வைத்துவந்த அபிமானங் குறையாதும், இன்னும் அதிக அபிமானங்காட்டியும், தமிழ்நாட்டில் இப்பத்திரிகை ஒன்றே விவசாயத்திற்கென்று உழைத்துவருகிறதை நினைத்து மேன்மேலும் உற்சாகப்படுத்தியும், இன்றியமையாத பிரயோஜனத்தையும், மாதந்தவராமல் பிரசுரமாகும்படியாக, தங்கள் தங்கள் பாக்கியை கொடுத்து உதவி செய்யவேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தவிரவும் மெம்பர்கள் அவரவர்களுடைய விவசாயத்தில் நடத்திவரும், முறைகளையும் பரிக்ஷைகளையும் அனுபவத்தையும் பத்திராதிபருக்கு வியாசமூலமாய் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்.

தென்னாட்டு கரிசல் நிலங்களில் மான்சூன் கலப்பையின் உபயோகம்.

மான்சூன் கலப்பையைப்பற்றின விவரங்களும் அதன் பிரயோஜனங்களும் முன் வெளியிட்டிருக்கும் விவசாய பஞ்சாங்கங்களில் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் கோவில்பட்டி சர்க்கார் விவசாயப் பண்ணையில் இதை உபயோகித்துப் பார்த்ததில் மிகவும் நல்ல கலப்பையென்று தெரியவந்தது. கரிசல் பூமிகளில் சொற்ப கிரயத்தில் ஒரு ஜோடி மாடுகொண்டு செவ்வையாய் உழக்கூடிய ஒரு கலப்பை மிகவும் அவசியமாய் இருக்கிறது. மேலும் அருகை பூராவாக சொற்ப செலவில் எவ்வாறு எடுப்பது என்பது இப்பக்கத்திலுள்ள சமுசாரிகளில் அனேகருடைய மனக்கவலை. இப்பொழுது இந்த இரண்டு வேலைகளையும் நன்கு செய்யும் கலப்பை நம்மிடத்தில் ஒன்று இருக்கிறது.

சாதாரணமாக இத்தென்பாகத்து கரிசல் காடுகளில் சமுசாரிகள் கோடை காலத்தில் 5 அல்லது 6 தடவை தங்கள் பூமிகளை நாட்டுக் கலப்பையால் உழுவது வழக்கம். ஆனால் மான்சூன் கலப்பைகொண்டு இரண்டு உழவு போதுமானது.

நாட்டுக்கலப்பையால் உழும்பொழுது ஆழமாய் உழவேண்டுமானால் சமுசாரிகள் கலப்பையைத் தங்கள் பலமெல்லாம் கூடி அழுத்திப் பிடிப்பதும் கல்லைக் கலப்பையில் வைத்துக் கட்டுவதும் வழக்கம். ஆனால் மான்சூன் கலப்பையால் உழும்போது இவ்வாறு செய்யாமல் மிகவும் சுலபமாய் உழலாம். வேலை செய்பவர் கஷ்டப்படாமல் மோழியைப் பிடித்துக்கொண்டுபோனால் போதுமானது.

எவ்விதமாக அழுத்திப் பிடித்தபோதிலும் நாட்டுக் கலப்பையால் உழும்போது 3 அல்லது 4 அங்குல ஆழத்திற்குமேல் போவது அரிது. மேலும் 5 அல்லது 6 தடவை உழுதபோதிலும் சரியான உழவு ஆகிறது இல்லை.

ஆனால் மான்சூன் கலப்பையோ மண்ணை நன்றாய் புரட்டி விடுவதுமல்லாமல் இடை கொஞ்சமேனுமில்லாமல் முற்றிலும் உழுதுவிடுகிறது. சாதாரணமாய் இக்கலப்பை 6 அங்குலம் முதல் 8 அங்குலம் ஆழம் வரையிலும் உழும். ஆகையால் மான்சூன் கலப்பையைக்கொண்டு உழுவதினால் காலதாமதமில்லாமல் பூர்த்தியான உழவும் பணச்சிக்கனமும் ஏற்படுகிறது. இதுதான் சமுசாரிகள் முக்கியமாய் கவனிக்க வேண்டியது.

நல்ல சமுசாரிகள் தன் நிலங்களில் அருகு இருக்க ஒருபொழுதும் சகிக்கமாட்டார்கள். எவ்விதத்திலுமாகிலும் அதை எடுத்துவிட முயல்வார்கள். அருகு எடுப்பதற்கு ஏக்கர் ஒன்றுக்கு சாதாரணமாய் ரூ. 40 ரூ. 60 வரையில் செலவுசெய்து வருகிறதைப் பார்த்துவருகிறோம். இவ்வாறு ஏன் பணத்தை வீணாக்கவேண்டும். அருகு எடுப்பதற்கு சுலபமான வழி ஒன்றுண்டு. அதாவது சமுசாரிகள் தங்கள் நிலங்களுக்கு எருவிட்டு சோளநாத்து விதைக்கவேண்டும். இப்படிச் செய்தால், கீழத்தில் இருக்கும் அருகானது பூமியின் மேலிருக்கும் உர்ச்சத்தை சாப்பிடுவதற்குமேல் நோக்கிவரும் சோளநாத்து அறுவடையானதும்

மானான கலப்பையைக்கொண்டு ஆழமாய் இரண்டு மூன்று தரம் உழுதால் அருகு எடுபட்டுப்போகும். ஆனால் உடனே கூலி ஆள்களைக் கொண்டு அருகை சுத்தமாய் பொருக்கி அப்புறப்படுத்திவிடவேண்டும். இல்லாவிட்டால் திடீரென்று கோடைமழை பெய்தால் அந்த அருகுகள் திரும்பவும் வேர் ஊன்றிக்கொள்ளும்.

N. S. குலந்தஸாமி பிள்ளை,
அக்ரிகல்சரல் டிமான்ஸ்ட்ரேடர்,
மதுரை.

நீர் இறைக்கும் இஞ்சின் ஸ்தாபனவிஷயமாய் கொடுக்கப்படும் கடன்களைப்பற்றிய ஸ்பெஷல் ரூல்கள்.

விவசாய டிபார்ட்மெண்டார் மூலமாய் குடிகள் நீர் இறைக்கும் இஞ்சின்களை வாங்கி ஸ்தாபித்துக்கொள்ளலாம். அப்படி இஞ்சின் வாங்க சர்க்காரில் கடன் கொடுக்கிறார்கள். கடன்கேட்கும் மனுக்களை தாமசமன்னியில் கூடிய சீக்கிரத்தில் பைசல் செய்யவேணுமென்கிற உத்தேசத்துடனும், விற்பனைக்குக் கிடைக்கும் அநேகவித இஞ்சின்களில் சிரேஷ்டமானதை வாங்கி அபிவிருத்தி செய்யப்போகும் நிலங்களில் அதை சரியாக ஸ்தாபித்துக்கொடுக்க வேண்டுமென்கிற உத்தேசத்துடனும் பூமி அபிவிருத்தி தக்காவி ஆக்டு 10-வது செக்ஷனை அனுசரித்து கடன் கொடுக்கும் நிமித்தம் கவர்ன்மெண்டார் சில ஸ்பெஷல் விதிகளை சாங்ஷன் செய்திருக்கிறார்கள்.

இந்த ஸ்பெஷல் ரூல்களில் முக்கிய அம்சங்களாவன :—

1. கடன் வேண்டுமானால் விவசாய டைரெக்டர் அவர்களுக்கு மனு செய்துகொள்ளலாம். ஒவ்வொரு கேஸிலும் 10,000 ரூபாய்க்கு அதிகப்படாத தொகையை கடன் கொடுப்பதற்கு அவருக்கு அதிகாரமுண்டு. மனு கொடுத்த உடனே இஞ்சின் ஸ்தாபனத்தைக்குறித்து விவசாய இஞ்சினீரைக்கொண்டு பரிசோதனை செய்விப்பார். விவசாய இஞ்சினீர் ஷை கடனுக்காக ஈடு வைக்கும் ஜாமீனின் பொறுமானத்தைக்குறித்து தாமசம் அன்னியில் அன்னியில் அந்த ஜில்லா ரிவினியு உத்தியோகஸ்தரால் விசாரணை செய்யப்படும். பொறும்படியான ஜாமீனிருந்து கோரும் கடன் ரூபா 10,000க்கு அதிகப்படாமலிருந்தால் ஷை கடன் டைரெக்டராலும் ஷை தொகைக்கு அதிகப்பட்டால் கவர்ன்மெண்டாராலும் சாங்ஷன் செய்யப்படும்.

2. கொடுக்கும் ஈட்டின் பொறுமானம் கேட்கிற கடன்தொகைக்கு ஒன்றரை மடங்குக்குறையாமல் இருக்கவேண்டும். அனால் வாங்கப்படுகிற இஞ்சின் பம்பு இவைகளினுடைய கிரயமும் ஷை தொகையில் அடங்கியதுதான். ஷை இஞ்சினும் பம்பும் வாங்குகிற கடன் பூராவும் திருப்பிக்கொடுக்கப்படும் வரையில் கவர்ன்மெண்டாருக்கு ஈடாக இருக்கவேண்டும். இஞ்சினும் பம்பும் தவிர கீழ்கண்டவைகளில் ஏதாவது ஒன்றையாகிலும் அதற்கு மேற்பட்டாகிலும் ஜாமீனாகக் கொடுக்கப்படும்:

(a) அபிவிருத்தி செய்யப்போகும் நிலத்தில் மனுதாருக்கு உள்ள பாத்யதை.

(b) மனுதாருக்கு சொந்தமான இதர நிலங்கள்.

(c) மனுதாருக்கு ஜாமீனாக இருக்க விருப்பமுள்ள இதர ஆசாமிக்கு சொந்தமான நிலங்கள்.

இந்த ரூல்களில் முக்கியமான ஒரு அம்சம் என்னவென்றால் அபிவிருத்தி செய்யப்போகும் நிலத்தின் பொருமானத்தை மதிக்கும்போது அபிவிருத்தி செய்த பிறகு ௸ நிலம் என்ன பொறக்கூடுமோ அந்த விலையை ஏற்றுக்கொள்ளப்படும்.

3. கடன் சாங்ஷன் செய்யப்பட்டால் மனுதார்கையில் அந்தத் தொகை ரொக்கமாக கொடுக்கப்படமாட்டாது. ஆனால் மனுதாரிடத்தில் ஒரு ஒப்பந்தம் வாங்கிக்கொண்டு ௸ துகையைக்கொண்டு டைரெக்டர் ௸ மனுதாருக்காக இன்சினை வாங்கி ஸ்தாபனம் செய்விப்பார். அந்த ஒப்பந்தத்தில் டைரெக்டருக்கே இன்சின்வாங்கி ஸ்தாபிக்க அதிகாரம் கொடுத்தும், அதின் விஷயத்தில் அவர் அப்போதைக்கப்போது சிலவு செய்கிற துகையை மனுதாருக்குக் கடனாகக் கொடுத்ததாக ஒப்புக்கொள்வதாயும் கண்டிருக்கும். இன்சின் பம்பு இவைகளுக்கு என்ன விலை ஏற்பட்டிருக்கிறதோ அந்தத் துகையின்பேரில் 100க்கு 5 வீதம் டிபார்ட்மெண்டு பீசுவசூல் செய்யப்படும் இந்தப்பீசில் இன்சின் முதலியவைகளை மனுதாரிடம் ஒப்புவிக்கும் வரையில் செய்ய வேண்டிய மேல்விசாரணையின் சிலவும் அடங்கியிருக்கிறது.

4. கடன் துகையின்பேரில் வருஷம் 1க்கு $6\frac{1}{4}$ வீதம் வட்டி கட்ட வேண்டும்.

5. ௸ கடனை அசல்வட்டி இரண்டையும் தீர்க்கும்படியான ஐந்து வருஷாந்திர சம கிஸ்திகளாகத் திருப்பிக்கொடுக்கவேண்டும். ஐந்துவருஷத்திற்குமேல் வாய்தா எந்த காரணத்தாலும் கொடுக்கப்படமாட்டாது.

6. எந்த வேலைக்காக கடன் கொடுக்கப்பட்டதோ அந்த வேலை விவசாய டிபார்ட்டுமெண்டார் ஸ்தாபனம் செய்ததில் ஏதாவது பிசகுகள் இருந்து அவைகளின் மூலமாய் பிரயோசனமில்லாமல் போய்விட்டால் ரிவினியு போர்டாராகிலும் அல்லது கவர்ன்மெண்டாராகிலும் அக்கடன் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களைப்பற்றி பூரணமான ரிபோர்ட்டின் பேரில் கடன் முழுமையுமாவது அல்லது அதில் ஒரு பாகத்தையாவது மாப்பு செய்துவிடலாம்.

7 வட்டியுடனும் இதர சிலவுடனும் கடன் திருப்பிக்கொடுபடும் வரையில் இன்சின் வகையறுக்களை வருஷத்திற்கு ஒரு முறைக்குக் குறையாமல் டைரெக்டர் அவர்கள் பரிசோதனை செய்வார் அவருக்கு அவசியமென்று தோன்றின மராமத்துகளை சொந்தக்காரன் சிலவின் பேரில் செய்விப்பார். அந்தக்காலங்களில் ௸ பரிசோதனை நிமித்தம் வருஷம் ஒன்றுக்கு ரூபாய் 15 வீதம் பீசுவசூல் செய்யப்படும்.

8. கிணறுகள் வெட்டவும், தரிசநிலங்களை சாகுபடிக்கு லாயக்காகும்படி சீர்திருத்தல் செய்யும் அவ்விதமான வேறு விஷயங்களுக்கும் விவசாய டைரெக்டரால் கடன் கொடுக்கப்படமாட்டாது. ௸ வேலைகளுக்கு கடன் வேண்டுமானால் அந்தந்த ஜில்லா ரிவினியு உத்தியோகஸ்தர்களிடம் மனுசெய்துகொள்ளவேண்டும்.

9. இதன்பின் ஒரு மனுவின் நமூனா கண்டிருக்கிறது. அதன் அச்சுக்காப்பிகளும் சவிஸ்தாரமான நூல்களும் விவசாய டைரெக்டர் ஆபீசில் கிடைக்கும். ஷெ ஆபீசுக்கு மேல்விலாசம்:—தபால்பெட்டி நெம்பர் 412 திருவல்லிக்கேணி, மதராஸ்.

10. அநேக நோக்கங்களில், அடியிற்கண்ட நோக்கங்களை முக்கியமாய் கவனித்து, இந்த நூல்களை இப்போது மாறுதல் செய்யப்படுகின்றன:—

(i) இருபது வருஷங்களுக்குள் இக்ககடன்களை திருப்பிகொடுக்க முடியவேண்டும்.

(ii) தனியாக நிலஈடுமானத்தன்பேரிலேயும், இயந்திரங்களின் பேரிலெயும் அல்லது, இவ்விரண்டையும் சேர்த்தாவது கடன் கொடுக்கமுடியவேண்டும்.

(iii) நபர் ஜாமீன்பேரில் விவசாய கருவிகளை வாங்குவதற்காக கொஞ்சம் கடன் கொடுபடும்.

இவ்விதிகள் இப்போது கவன்மெண்டாரால் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

(இதை தொடர்ந்த ஸ்டேட்மெண்டை 6-ம் பக்கத்தில் பார்க்க.)

கால்நடைகளின் சில சாதாரண வியாதிகள்.

மலச்சிக்கல்.—மலச்சிக்கலானது கால்நடைகளின் முதல் இரப்பையில் உணவு உலர்ந்து செரியாததால் உண்டாகிறது.

தேக சுகத்தைக்குறைக்கும் சகல ஏதுக்களும் மலச்சிக்கலுக்குக் காரணமாக இருக்கிறது.

காரணங்கள்.—மேற்சொல்லியபடி இரைப்பையில் உணவு உலர்ந்து திரண்டு கெட்டிப்பட்டு விடுதலும், கால்நடைகள் ஆவலோடு தின்ன விரும்பும் உணவுகளை மிகமிஞ்சித்தின்னவாய்தலும், சத்தில்லாது நாரோடி முதிர்ந்த தட்டைகளைத் தின்னுதலும், வேண்டிய அளவு தண்ணீர் குடியாதிருத்தலுமே மலச்சிக்கலுக்குக் காரணங்களாக இருக்கின்றன.

குறிகள்,—வெளிப்படையாகத் தோன்றுங்குறிகளாவன.—கால்நடைகள் சாணம்போடும்போது முக்குகிறது. சாணம் குறைவாயும் புழுக்கையாகவுமிருக்கும். சிலசமயங்களில் தீனிதின்னாமலும் அசைப்போடாமலும் சோம்பலாய் நிற்கிறது. சிலபோது வயற்றில் மிகுந்த வலி இருப்பதாய்க்காணப்படுகிறது.

பரிகாரம்.—கறி உப்பு 1 அல்லது $1\frac{1}{2}$ பவுன் அதாவது 7 அல்லது $10\frac{1}{2}$ பலம், சுக்குத்தூள் 2 அல்லது $2\frac{1}{2}$ தோலா அதாவது 2 அல்லது $2\frac{1}{2}$ ரூபாயிடை சுடு தண்ணீர் 2 பயிண்டு (40 அவுன்ஸ்) அதாவது சுமார் முக்கால் பக்கா, இவைகளைக்கலந்து போடவேண்டியது. குடிக்க ஏராளமான தண்ணீர் கொடுக்கவேண்டும்.

1883-வருஷத்திய லாண்டு இம்புருவ்மெண்டு லோன்ஸ் ஆக்ட் 10-வது செக்ஷன் பிரகாரம் செய்யப்பட்ட ஸ்பெஷல் விதிகளின்படி நீர்ப்பாய்ச்சும் இன்ஜின் ஸ்தாபிக்கக்கோரும் கடன் மனுவின் நமூனா

1. மனுதாரரின் பெயர், அவர் தகப்பன் பெயர், அவர் இருக்கும் இடம்.
2. கடனின் தொகை.

அபிவிருத்தி செய்யப்போகும் நிலத்தைப்பற்றிய விவரங்கள்.			நிலத்தில் மனுதாருக்கு உள்ள பாத்தியதைக்கு அத்தாட்சி; பட்டாவில் பேர் பட்டா வாரிசு க்கிரயம்; மனுதாரரின் அனுபோகத்தில் அப்பிரிகள் இருக்கின்றனவா?	பூமியில் இசாருதையைய பாத்யதை		கொடுக்கும் ஜாமின் விவரம்.					புதிமையா ஜாமீனைக் கொடுக்க எண்ணும் கொண்டவரின் பெயர், அவருக்கு அந்த நிலத்தில் உள்ள பாத்தியதை.	ஜாமீனைக் கொடுக்கும் சொந்தக்காரர் பெயரில் இருக்கும் முன் ஏற்பட்ட சஞ்சுவர பந்தங்களின் விவரம்.	அபிவிருத்தி செய்யப்போகும் நிலத்துக்கு ஜாமீனைக் கொடுக்கும் நிலங்களின் பேரில் சர்க்கார் தீர்வை பாக்கி இருக்கிறதா?	திருப்பிக் கொடுக்க உத்தேசிக்கும் காலம்.	ஷரா,
						பூமியால்.									
கிராமம் சர்வே நம்பரும் வெட்டும், நன்செய் அல்லது புன்செய்.	விஸ்தீரணம்.	தீர்வை.		பெயர்.	பாத்யதை எவ்வளவு; எப்பேர்ப்பட்ட பாத்யதை? அல்லது தீர்வை ஏற்பட்டதா? அல்லது எப்படி ஏற்பட்டது?	சர்வே நெம்பர்.	விஸ்தீரணம்.	தீர்வை.	யார் பெயரில் பட்டாவாயிருக்கிறது.	ஜாமின் வைக்கும் இன்ன இதர பாத்யதைகளின் விவரம்.					
	ஏ. செ.	ரூ. அ.					ஏ. செ.	ரூ. அ.							

ஜாமினுக்கொடுபடும் சொத்தின் பேரில் உள்ள சஞ்சுவரபந்தங்களின் (முன்கடன், அடமானம் முதலியவைகளின்) விவரங்கள் எனக்குதெரிந்தவரைக்கும், கேட்டவரைக்கும், ஷெ நமூனாவில் கண்ட விவரப்படி நிஜமென்று உறுதியாய்ச் சொல்வதுடன் சொத்துக்களின் பேரில் வேறுயாதொரு சஞ்சுவர பந்தங்களும் இல்லையென்றும் நான் நம்புவதாயும் மனுதாரனாகிய / ஜாமீனாகிய நான் இதன் மூலியமாய் பிரமாணமாய்ச் சொல்லுகிறேன்.

மருந்துகொடுத்து 8, 12, 16 மணி நேரத்திற்குள் அதாவது 20 முதல் 40 நாழிகைக்குள் சாணம் நெகிழ்ச்சியாய்போட ஆரம்பிக்கும்.

வயற்றில் வலி இருக்கிற சமயங்களில் மிளகுத்தூள் 2 தோலா அதாவது 1 ரூபாயிடையை மேற்சொல்லிய மருந்தோடு சேர்த்துக் கொள்ளவேண்டும். 36 மணிவரை அதாவது 90 நாழிகைக்குள் பேதி போகாதிருந்தால் விளக்கெண்ணெய் 10 அவுன்ஸில் (அதாவது $1\frac{1}{2}$ ஆழாக்கு) நேர்வாளத்தைலம் அல்லது எண்ணெய் (Croton oil) 30 சொட்டு விட்டு கொடுக்கவேண்டும். நேர்வாளக்கொட்டையைப் பொடித்து எண்ணெயில் போட்டு கொடுக்கவேண்டும். மருந்து கொடுக்குங் காலங்களில் வைக்கோலாவது தானியமாவது கொடுப்பது உசிதமல்ல. கொஞ்சம் பச்சைப்புல் கொடுக்கலாம். தவிட்டை சுடுவெந்நீர் விட்டு அவித்து ஆறியபின் கொடுக்கவேண்டும்.

இதற்குப்பின் ஒருவாரம் வரையிலும் சுக்குத்தூள் $1\frac{1}{4}$ தோலா அதாவது $1\frac{1}{2}$ ரூபா இடை, மிளகுத்தூள் $1\frac{1}{4}$ தோலா அதாவது $1\frac{1}{4}$ ரூபா இடை, எட்டிவிரைத்தூள் $\frac{1}{2}$ தோலா அதாவது $\frac{1}{2}$ ரூபா இடை இவைகளைக்கலந்து தீனியில்கொடுக்கவேண்டும்.

(எட்டி விரையை அவித்தாவது வறுத்தாவது தான் பொடி பண்ண முடியும். கன்றுகளுக்கு மலச்சிக்கலிருந்தால் இரண்டு முதல் நாலு அவுன்ஸ் அதாவது அரை மாகாணிபடி விளக்கெண்ணை கொடுத்தால் நிவர்த்தியாகும்.

வயிற்றுப்போக்கு அல்லது சாதாரண கழிச்சல்.—சரியாய்ச்சொல்லப்புகுந்தால், வயிற்றுப்போக்கு ஒரு வியாதியல்ல. மற்றவியாதிகளின் குறியாகவே இருக்கிறது. கிராமாந்தரங்களில் கவனமாக கால்நடைகளுக்குத் தீனிபோடாததால் அவைகளுக்கு வயிற்றுப்போக்கு சாதாரணமாக இருந்து கொண்டிருக்கிறது. இது சாதாரண வயிற்றுப்போக்கு.

இதன் காரணங்கள்.—தின்னுமுணவு நல்லதாகயில்லாததாலும், தண்ணீர் அகப்படாத கோடைகளில் அசுத்தமான தண்ணீரை குடித்தலாலும் அரைவயிற்றுத் தீனியோடு இதர வஸ்துக்களையும், காரபூண்டுகளையுந் தின்பதாலும், மழைகாலத்தில் முதலில் தழைத்த இளம் புல்லை மேய்வதாலுமுண்டாகிறது.

அன்றியும் குடலில் பூச்சி உண்டாயிருப்பதாலும், வெக்கையென்ற தொத்து வியாதிகளின் நிமித்தமாயும் உண்டாகிறது.

குறிகள்.—அடிக்கடி தளர்ச்சியான சாணம்போடுகிறது. வாயிலுந பின்னங்கால்களிலும்கழிந்தசாணம்பட்டிருக்கும். மாடுமெலிகிறது முத்வில் சரியாகத் தெரிகிறதில்லை. ஆனால் கழிச்சல் சில நாளைக்கு நீடித்தால் தின்ற தீனி உடம்பில் சேர்கிறதில்லை. மாடு இளைக்கிறது. வயிறு ஒட்டிப் போய்விடுகிறது. மயிர்சிலிர்க்கிறது. கழியும்போது கொஞ்சம் முக்குகிறது.

பரிகாரம்:—கால்நடைகளின் தகுதியை அறிந்து 10 முதல் 20 அவுன்சு அதாவது $1\frac{1}{4}$ ஆழாக்கிலிருந்து $2\frac{1}{2}$ ஆழாக்கு விளக்கெண்ணெய் முதல் கொடுக்கவேண்டும். இதனால் குடலில் செரியாது உறுத்திக் கொண்டிருந்த தீனிகள் வெளியே வந்துவிடும்.

அநேகமாய் இந்த மருந்துமட்டுமே போதுமானதாக இருக்கும். மேல் வைத்தியம் வேண்டிருந்தால்:—

காசுக்கட்டி—$\frac{1}{2}$ அல்லது 1 தோலா அதாவது $\frac{1}{2}$ அல்லது 1 ரூபா இடை; சீமைச்சுண்ணாம்பு—$1\frac{1}{2}$ அல்லது 2 தோலா அதாவது $1\frac{1}{2}$ அல்லது 2 ரூபா இடை; சுக்கு—1 தோலா அல்லது 1ரூபாய் இடை இவைகளைப்பொடித்து 20 அவுன்சு அதாவது $2\frac{1}{2}$ ஆழாக்கு அரிசிக்கஞ்சியில் நன்றாய்க்கலந்து கொடுக்கவும்.

ஆகாரம்—கஞ்சியாவது கொதிக்கிற வெந்நீரில் பொதும்பி ஆரியதவிடாவது கொடுக்கவேண்டும். குடிப்பதற்கு சுத்தமான தண்ணீரைக் கொடுக்கவேண்டும்.

வெக்கை அல்லது மற்ற தொத்து வியாதிகளாகத்தெரிந்தால் தாலூகாதாசில்தாருக்காவது சமீபத்திலிருக்கும் வெட்டரினெரி அஸிஸ்டெண்டுக்காவது தெரியப்படுத்தவேண்டும்.

வயிற்றுப்பொருமல்:—இந்த வியாதியில் வயிறு கெட்டகாற்றால் விம்மிவிடுகிறது. இந்த வியாதி கால்நடைகளுக்குச் சாதாரணமாய் வருவதுண்டு. மேற்சொல்லிய கெட்டகாற்று செரியாத உணவிலிருந்து உண்டாகிறது.

காரணங்கள்:—நனைந்த புல்லையாவது பச்சைப் புல்லையாவது அதிகமாக மேய்தல், வழக்கமில்லாத தீனியை தின்னல், கோடைகாலத்தில் சரியாய்த் தீனி கிடையாதிருந்து முதல் மழை பெய்தவுடன் முளைத்த கொழுகொழுத்த இளம் புல்லை மிதமிஞ்சிமேய்வதனாலும் இந்த வியாதி உண்டாகிறது.

கால்நடைகளின் வயற்றிலேயே இந்தக் கெட்ட காற்று உண்டாகிறது. வயிற்றில் காற்று அதிகமாய்விட்டால் பொறுக்கமுடியாத அபாயமான குறிகள் தோன்றுகின்றன.

குறிகள்:—முதல்முதல் இடதுபக்கத்தில் வயிற்றிலுள்ள பள்ளம் காற்றால் ஊதி இருப்பதைப்பார்க்கலாம். அதைக்கொட்டினால் மத்தளம் போடும். வலி பொறுக்கமுடியாமல் படுத்தும் எழுந்துகொண்டுமிருக்கும். கெச்சிதமாக இருக்கும்போது விடாது அசைப்போடுகிற மாடு இந்த வியாதிகண்டதும் வாயை அசைக்கிறதில்லை. வியாதியின் ஆரம்பத்திலேயே தக்க சிகிச்சை செய்யாது போனால் ஒவ்வொரு வினாடியுங் காற்று அதிகரித்து வயிறு மிகுதியாய்ப் புடைத்து மாடு மூச்சு முட்டிக் கீழே விழுந்து இருக்கிறது.

பரிகாரம்:—கர்ப்பூரத்தைலம் (turpentine)—2 அவுன்சு அதாவது $\frac{1}{2}$ மாகாணி படி; விளக்கெண்ணெய்—20 அவுன்சு அதாவது $2\frac{1}{2}$ ஆழாக்கு இதை நன்றாய்க் கலந்து கொடுக்கவேண்டும்.

(தொடரும்.)

Printed at the Alexandra Press, Kumbakonam and Published by Mr. Rao Sahib C. R. Lakshmivaraha Ayyangar, B.A., B.L., & Mr. R. Srinivasa Ayyangar, B.A., for The Agricultural Association, No. 5, Cutchery Road, Kumbakonam.